DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.1 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC 122 / 2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW.6 |
| Name | திரு.அருள்மோசஸ் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | சிறப்பு உதவி ஆய்வாளர், ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையம். |
| Religion | |
| Age | |

**( எதிரி ஆஜர், )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-07-2026.(நேரம்: 03.50 P.M )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்கிறேன். இந்த வழக்கினை பதிவு செய்து மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் திரு. சேக்அப்துல்காதரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 02.06.2011ம் தேதி 15.45 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் காவல் நிலைய பொறுப்பில் உதவி ஆய்வாளர் சேக்அப்துல்காதர் இருந்தபோது ஸ்ரீவைகுண்டம் அரசுமருத்துவமனையில் இருந்து கிடைத்த புதுத்தெருவை சேர்ந்த முத்து மகன் பராசக்தியின் இன்டிமேசனை பெற்று

தகவல் படி அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த பராசக்தி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 235/2011 இதச 294(பி), 323, 506(2) ஆக பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஸ்ரீவைகுண்டம் அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

3. விசாரணை நகலை விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்ததை அவர் 02.06.2011 ம் தேதி சாட்சிகள் சங்கரன் மற்றும் முத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் சாட்சிகளான கருப்பசாமி மற்றும் சேகர் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்து பொருளான இருசக்கர வாகனத்தை கைப்பற்றி அத்தாட்சி பிறப்பித்து நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் அனுப்பி வைத்துள்ளார். **அந்த அத்தாட்சி மற்றும் படிவம் 91 அ.சா.ஆ 6, 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு சாட்சிகள் பராசக்தி, கோமதி, சண்முகநாதன், பொன்னம்மாள், சுப்பையா, சங்கரன், முத்து, கருப்பசாமி, சேதுராமலிங்கம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. விசாரணையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் 03.06.2011 ம் தேதி 11.00 மணிக்கு

ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள மேடைபிள்ளையார் கோவில் பஸ்நிறுத்தத்தில் வைத்து இவ்வழக்கின் எதிரியான இசக்கியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து பின் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றம் அனுப்பியுள்ளார்.

6. இவ்வழக்கில் காயம்பட்ட நபர்க்கு சிகிட்சை அளித்த ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திரு. ஐயம்பெருமாள் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். மருத்துவர் அளித்த **காயச்சான்று அ.சா.ஆ 8 ஆகும்.**

7. இத்துடன் தனது விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323,506(2) சட்டமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றம் அனுப்பியுள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சொன்னநேரத்தில் சொன்னவிதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 னிடம் எழுதப்படாத வெள்ளைதாளில் கையொப்பம் மட்டும் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்வாக்குமூலம் போலிசாரால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி சொன்னநேரத்தில் சொன்னஇடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னுல் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னுல் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.07 17:24:29 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்